Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் I.] 1941-ம் ௵ அக்டோபர் ௴ 31௳, வெள்ளிக்கிழமை. [இதழ் 33

## ஜெர்மனியின் புதிய தந்திரம்

### பிரிட்டனோடு சமாதானம் செய்துகொள்ள விரும்புகிறதாம்!

### பிரான்சைப் பொய்சொல்லி மோசம் செய்த கதை

### "ஹிட்லரிசம் அழியும்வரை சமாதானமே இல்லை"

சில வாரங்களாக, ஜெர்மனி ஒரு புதிய தந்திரமான வேலை செய்து வருகிறது. பிரிட்டனோடு தான் சமாதானமாகப் போவதாக சில வதந்திகளைக் கிளப்பிவிட்டிருக்கிறது. ஆனால் ஜெர்மனியிலிருந்து இந்த வதந்திகள் கிளம்பவில்லை. யுத்தத்தில் கலக்காமல் நடுநிலைமையில் இருக்கும் நாடுகளிலிருந்து, சமாதானப் பேச்சுகள் வெளிவந்திருக்கின்றன. இது ஜெர்மனியின் தந்திரமான சூழ்ச்சி. இப்படிப்பட்ட சூழ்ச்சியை ஜெர்மனி ஏன் செய்யவேண்டும்? ரஷ்யாவில் நடக்கும் பெரிய சண்டையில் ஜெர்மனி களைத்திருக்கிறது; கொஞ்சகாலம் சமாதானமும், ஓய்வும் இருந்தால், மறுபடியும் சண்டையை மும்முரமாக நடத்துவதற்கு வேண்டிய சௌகரியங்களையும், ஆதாயங்களையும் தேடிக்கொள்ளலாம் என்பது ஜெர்மனியின் நோக்கம்.

எந்தக் காரணத்தைக் கொண்டு ஜெர்மனி பிரிட்டனோடு சமாதான உறவு கொண்டாட விரும்புகிறது? பிரிட்டனும் ரஷ்யாவும் ஜென்ம விரோதிகளாம்! ரஷ்யாவின் பொதுவுடைமைக் கொள்கையாகிய 'பால்ஷிவிசத்'தை ஜெர்மனி எப்படி வெறுக்கிறதோ, அதைப்போல பிரிட்டனும் வெறுக்கிறதாம்! இப்போது ரஷ்யா பலம் குறைந்து வீழ்ச்சியடையும் நிலைமையில் இருக்கிறதாம்! ஆகையால் இந்த சமயத்தில் பிரிட்டனும் ஜெர்மனியும் சமாதானம் செய்துகொண்டு, ஒன்று சேர்ந்து ஒரேயடியாக ராட்சதனைப்போல உள்ள ரஷ்யாவையும், 'பால்ஷிவிசம்' என்ற பொதுவுடைமைக் கொள்கையையும், அழித்துவிடலாமாம்!

ஜெர்மனி மற்றொரு விதமான தந்திரப் பேச்சும் பேசுகிறது. பிரிட்டனிடமிருந்து தனக்கு ஒன்றும் வேண்டியதில்லையாம். பிரிட்டனுடைய சாம்ராஜ்ய நாடுகள், குடியேற்ற நாடுகள் முதலியவைகளை பிரிட்டனே வைத்துக்கொள்ளலாமாம்! ஜெர்மனிக்கு அவைகளில் ஒன்றுகூட வேண்டாமாம்!

ஜெர்மனி தந்திரமாக, இந்த சமாதானப் பேச்சைக் கிளப்பி, பிரிட்டனையும், நேச நாடுகளையும் ஏமாற்றிவிடலாம் என்று நினைத்திருக்கிறது. இப்போது சமாதானம் செய்துகொண்டால் ஜெர்மனிக்கு சில லாபங்களுண்டு. முதலாவது, நேசதேச நாடுகளின் யுத்த முயற்சியின் கடுமையான வேகத்தைக் குறைத்துவிடலாம். இரண்டாவது, யுத்தத்தில் தான் களைத்திருப்பதனால் கொஞ்சம் ஓய்வெடுத்துக்கொண்டு மறுபடியும் போரைத் தொடங்கலாம்.

### பலிக்காது!

ஆனால், ஜெர்மனியின் ஏமாற்றும் தந்திரம் பலிக்காது. அதனுடைய உண்மையான நோக்கங்கள் பிரிட்டனுக்கு நன்றாகத் தெரியும். ஜெர்மனி மற்றநாடுகளைப் பொய் சொல்லி ஏமாற்றியதைப்போல பிரிட்டனை ஏமாற்ற முடியாது. பிரான்சு தேசத்தை எப்படி ஜெர்மனி ஏமாற்றி சரணமடையும்படி செய்தது என்பது உலகம் முழுவதும் தெரிந்த விஷயம். பிரான்சு சரணமடைந்துவிட்டால் அதை ஒன்றும் செய்வதில்லை என்று ஜெர்மனி வாக்களித்தது. 1940-ம் ௵ ஜூன் ௴ 7௳ ஜெர்மனி ரேடியோ மூலம் பிரான்சுக்குக் கொடுத்த உறுதிமொழியாவது:—

"ஜெர்மானியர்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள். பிரெஞ்சு மக்களாகிய நீங்கள் எப்போது ஆயுதத்தைக் கீழே போட்டுவிடுகிறீர்களோ, அப்போதே ஜெர்மானியர்களும் கீழே போட்டுவிடுவார்கள். பிரெஞ்சுக்காரர்கள் மகா வீரர்களைப்போல் போர் புரிந்ததனால், அவர்களை நாங்கள் கேவலமாக நடத்தமாட்டோம்."

இந்தப் பொய் வார்த்தைகளை பிரான்சு நம்பி மோசம்போய்விட்டது. பிரெஞ்சு மக்கள் சமாதானத்துக்குப் பிறகு மிகவும் கேவலமாக நடத்தப்படுகிறார்கள். எவ்வளவு அநியாயங்களும், கொடுமைகளும் ஜெர்மானியர்களால் செய்யமுடியுமோ, அவ்வளவும் அவர்கள் பிரான்சில் செய்திருக்கிறார்கள். இதெல்லாம் செய்தது போதாதென்று, இப்பொழுது ஒரு புதிய கொ[illegible]தலை ஜெர்மனி செய்யப்போகிறது. அதாவது பிரான்சினுடைய குடியேற்ற நாடுகளை எல்லாம் பிடுங்கிக்கொள்வது. பிரான்சுதான் இந்த யுத்தத்திற்கே காரணமாம்; ஆகையால் அதற்கு தகுந்த தண்டனை கொடுக்கவேண்டுமாம்! பிரெஞ்சு குடியேற்ற நாடுகளை அச்சு ஒப்பந்தக் கூட்டாளிகளாகிய ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், இவைகள் மூன்றும் பங்குபோட்டுக்கொள்ளும் என்று தெரிகிறது.

### வெண்ணெயும் பீரங்கியும்.

சமாதான வார்த்தை கூறி பிரான்சை ஏமாற்றியதைப்போல, இப்போது ஜெர்மனி பிரிட்டனை ஏமாற்ற விரும்புகிறது. இது ஜெர்மனியின் பழைய பாடம். முன்னொரு தடவை, ஜெர்மனி, பிரிட்டனை சமாதானத்துக்கு அழைத்தது. அந்த சமாதானப் பேச்சை பிரிட்டன் உதறித்தள்ளிவிட்டது. ஜெர்மனிக்கு சமாதானத்தில் நம்பிக்கையே கிடையாது; ராணுவ பலத்தில்தான் நம்பிக்கை. அதனால்தான் ஆறு வருஷங்களாக, டாங்கிகள், பீரங்கிகள், ஆகாய விமானங்கள் செய்வதில் தன்னுடைய முழு கவனத்தையும் ஜெர்மனி செலுத்தியது. "வெண்ணெய் இல்லாமல் காலங்கழிக்கலாம்; ஆனால் யுத்த ஆயுதங்கள் இல்லாமல் வாழமுடியாது. வெண்ணெயினால் சுடமுடியாது; பீரங்கிகளால் சுடலாம்" என்று ஹிட்லரின் பிரசார மந்திரி, டாக்டர் கோப்பல்ஸ் கூறியிருக்கிறார். ஹிட்லரும் தன்னுடைய புத்தகத்தில் சொல்லுவதாவது:—"எந்த யுத்த ஆயுதங்கள் மிகக் கொடூரமானவையோ, அவைகள்தான் மனித சமூகத்துக்கு மிகவும் நல்லவை. ஏனென்றால், கொல்லும் வேலையை அவைகள் சீக்கிரம் முடித்துவிடுகின்றன."

சமாதானக் கொள்கையே மனித சமூகத்துக்கு விரோதமானது என்று ஜெர்மனி நம்புகிறது. சமாதான உணர்ச்சியே அதனிடம் கிடையாது. தந்திர வார்த்தைகளாலும், பயத்தினாலும், மிரட்டலினாலும் பிரிட்டனை மயக்க விரும்புகிறது. சமாதான முயற்சி இப்போது ஆரம்பிக்கப்பட்டதல்ல. ஹிட்லருடைய வலது கையைப்போலிருந்த ஹெஸ் என்பவர், ஆகாய விமான மூலமாகப் பிரிட்டனுக்குப் பறந்து வந்ததன் காரணம் அதுதான். அவர் 1940-ம் ௵ மே ௴ 10-ந் தேதி வந்து சேர்ந்தார். அன்றைய தினம் லண்டனில் எப்போதும் இல்லாத கடுமையான ஜெர்மன் விமானத்தாக்குதல் நடந்தது. லண்டன்மாநகரத்தில் வெடிகுண்டுமாரி கணக்கில்லாமல் பெய்தது. ஹெஸ் வந்த காரணம் பிரிட்டனுடன் சமாதானப்பேச்சு பேசுவதற்காகவே. அதே நாளில் மிகக்கடுமையாக லண்டனில் வெடிகுண்டுகள் போட்டால், பிரிட்டிஷார் பயந்து சமாதானப் பேச்சை வரவேற்பார்கள் என்பது ஹிட்லருடைய எண்ணம். ஹிட்லருடைய யோசனையின்பேரில்தான், ஹெஸ் பிரிட்டனுக்கு வந்தார் என்ற விஷயத்தை மிஸ்டர்

ஜேம்ஸ் மர்பி என்பவர் ஹெஸ்ஸைப்பற்றித் தான் எழுதிய புத்தகத்தில் விளக்கிக் காட்டியிருக்கிறார்.

### ரஷ்யப் போர்த் திட்டம்.

ரஷ்யாவைத் தாக்கியதும் ஜெர்மனியின் விரிவான திட்டத்தில் முக்கியமான பாகம் ரஷ்யாவின் ராணுவ பலத்தை ஒடுக்கி, ரஷ்ய மூலப்பொருள்களையும், தொழில் செல்வங்களையும் கைப்பற்றவேண்டும் என்பது ஜெர்மனியின் விருப்பம். ஏனென்றால், பிரிட்டனின் பொருளாதார முற்றுகை ஜெர்மனிக்கு அதிக தொந்தரவாயிருக்கிறது. வெளி நாடுகளிலிருந்து எந்த சாமானும் ஜெர்மனிக்குப் போய்ச் சேரவொட்டாமல், பிரிட்டிஷ் கப்பற்படை தடுத்துக் கொண்டே இருக்கிறது. ஆகையால் தனக்கு வேண்டிய சாமான்களைப் பெறுவதற்காக, ஜெர்மனி ரஷ்யாவைத் தாக்கிக்கொண்டிருக்கிறது. அந்த சாமான்களைக் கைப்பற்றிக்கொண்ட பிறகு பிரிட்டனைத் தாக்க வேண்டும் என்று ஜெர்மனி திட்டம் போட்டிருக்கிறது. ரஷ்யத்திட்டத்தில் மூன்று முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன :—(1) ரஷ்யத்தலைநகராகிய மாஸ்கோவைக் கைப்பற்றுவது. (2) பெட்ரோல் எண்ணெயும், கோதுமையும் அதிகமாக இருக்கும் காகசஸ் பிரதேசத்தைப் பிடித்துவிட்டு, அமெரிக்காவிலிருந்தும், பிரிட்டனிலிருந்தும், ரஷ்யாவுக்குச் சாமான்கள் செல்லும் 'சப்ளை' வழியை அடைத்து விடுவது. (3) அதன் பின் பிரிட்டிஷ் துருப்புகளைச் சிதறடித்து, பிரிட்டனின் யுத்த முயற்சியையே அழித்துவிடுவது.

இந்த மூன்று நோக்கங்களும், இப்போதிருக்கும் நிலைமையில், நிறைவேறுவது முடியாத காரியம். ஜெர்மனியின் சமாதான முயற்சியும் பலிக்கப்போவதேயில்லை. பிரிட்டனும், அமெரிக்காவும், ஜெர்மனியின் சமாதான வலையில் சிக்கப்போவதில்லை. ஹிட்லரிசம் ஒழிக்கப்படும் வரையில் சமாதானமே இடையாது என்று அமெரிக்கத் தலைவர், மிஸ்டர் ரூஸ்வெல்ட் வற்புறுத்திக் கூறியிருக்கிறார். பிரிட்டனின் அயல் நாட்டு மந்திரி, மிஸ்டர் அந்தோணி ஈடன் இதே விஷயத்தைப் பல தடவைகளில் வற்புறுத்தியிருக்கிறார். தென்னாப்பிரிக்காவின் தலைவர், பீல்டு மார்ஷல் ஸ்மட்ஸ், ஹிட்லரிசத்தை அடியோடு அழிக்கும் வரையில் போர்நடந்து தான் ஆகவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். மற்ற பெரிய தலைவர்களும் ஜெர்மனியுடன் சமாதானம் செய்துகொள்ளக் கூடாது என்று அறிவித்திருக்கிறார்கள்.

ஆகையால் ஜெர்மனியின் சமாதானப்பேச்சு எப்படி முடியும் என்பது தெரிகிறது. நேச தேசத்தார்களிடம் சந்தேகமும், குழப்பமும் உண்டாக்கவேண்டும் என்ற ஜெர்மனியின் நினைப்புகூட பிரயோசனப் படப்போவதில்லை. பிரிட்டனும், அமெரிக்காவும் ஜெர்மனியுடன் சமாதானம் செய்துகொள்ள முடியாது; செய்து கொள்ளப் போவதுமில்லை. இந்த யுத்தத்தில் இரண்டில் ஒன்று தெரியவேண்டும். சுதந்தரக்கொள்கை பலமுடையதா அல்லது நாஸிக் கொள்கை பலமுடையதா என்ற விஷயம் முடிவு செய்யப்படவேண்டும். நாஸிக்கொள்கையை அழிக்கும் வரைக்கும் சுதந்தரக் கொள்கைக்காரர்கள் கட்டாயம் போராடுவார்கள்.

---

# பிரிட்டனின் கடல் வெடிகுண்டு விமானங்கள்

## எதிரிக் கப்பல்கள்நாசம்.

### கடல் யுத்தத்தில் சாமர்த்தியமான ஆயுதம்.

இந்த யுத்தத்தில் ஒரு முக்கியமான ஆயுதம் சாமர்த்தியமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது. அது தான் ஆகாயத்திலிருந்து கடலில் போடும் 'டார்பிடோ' வெடிகுண்டு. பிரிட்டிஷ் கப்பல் படைக்கு உதவியாயிருக்கும் ஆகாய விமானப்படை, இந்த வெடிகுண்டை அடிக்கடி உபயோகிக்கிறது. இந்த விமானங்களுக்கு 'டார்பிடோ பாம்பர்' என்று பெயர். ஆகாய விமானத்திலிருந்து, டார்பிடோவைக் கடலில் போட்டால், தண்ணீருக்குள்ளேயே கொஞ்சதூரம், வேகமாய்ச்செல்லும் பெரிய மீனைப் போல இது ஊடுருவிச்செல்லும்; அப்படியே சென்று தூரத்திலிருக்கும் கப்பலின் கீழ் பாகத்தில் தாக்கி, அதை நாசமாக்கிவிடும். கடலுக்குள்ளேயே செல்லும் 'சப்மரீன்'கள் இதை உபயோகித்து, பெரிய கப்பல்களைத்தாக்குவது வழக்கம். ஆனால் இப்போது ஆகாய விமானங்கள் கூட இதை உபயோகித்து, எதிரிக்கப்பல்களை நாசமாக்குகின்றன.

உதாரணமாக, ஐரோப்பாவுக்கு வடக்கே உள்ள நாடாகிய நார்வேய்க்கு அருகிலும், இத்தாலியின் தென்கிழக்கு துறைமுகமாகிய டராண்டோ என்ற இடத்திலும், கிரீஸ் தேசத்தின் தெற்கிலுள்ள மடாபன் முனையிலும், நடந்த சண்டைகளில் இந்த வெடிகுண்டுகள் உபயோகப்படுத்தப்பட்டன. இந்த சண்டைகளில் பிரிட்டிஷ் விமானங்கள் ஆகாயத்திலிருந்து 'டார்பிடோ' வெடிகுண்டுகளைப் போட்டு, எதிரிகளின் கப்பல்களை நாசமாக்கிவிட்டன. "பிஸ்மார்க்" என்ற பிரம்மாண்டமான ஜெர்மன் கப்பலைத் தாக்குவதற்கும் இந்த வெடிகுண்டு உபயோகப்படுத்தப்பட்டது. பிரிட்டிஷ் கடற்படை விமானங்கள் 'டார்பிடோ' வெடிகுண்டுகளை உபயோகித்துச் சிறந்த வெற்றிகளை அடைந்திருக்கின்றன. அதிக தூரத்திலிருக்கும் எதிரிக் கப்பல்களைத் தாக்குவதில் இந்த ஆகாய விமான 'டார்பிடோ' நல்ல வேலை செய்கிறது.

இதைப்பற்றி சிலாக்கியமாக, ராணுவ நிபுணர்கள் பேசுகிறார்கள். அவர்கள் பேசுவதிலிருந்து, இது ஏதோ புதிய யுத்த ஆயுதம் என்று சிலர் நினைக்கலாம். அப்படியல்ல, இது பழைய ஆயுதம்தான். ஆகாய விமானங்கள் முதலில் 'டார்பிடோ'க்களைத் தான் உபயோகித்தன. அதற்குப்பிறகு, வெடிகுண்டுகள் உபயோகப்படுத்தப்பட்டன. சென்ற யுத்தத்தில் 1914-ம் ஒரு கடல் விமானத்திலிருந்து 'டார்பிடோ' போடப்பட்டது. 1915-ம் ஆகஸ்டுமீ ஒரு துருக்கி துருப்புக் கப்பல், மார்மோரா கடலில் ஆகாயவிமான 'டார்பிடோ' வினால் தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டது.

### நார்வே சண்டை

இந்த யுத்தத்தில் முதல் முதலில், 'டார்பிடோ பாம்பர்' நார்வே சண்டையில் உபயோகிக்கப்பட்டது. பிரிட்டிஷ் விமானப்படையும், கடல் விமானப்படையும், ஏராளமான 'டார்பிடோ'க்களுடன் சண்டையில் பிரவேசித்தன. டாக்கர் (இது வடமேற்கு ஆப்ரிக்காவில் செனிகால் மாகாணத்திலுள்ளது) என்ற துறைமுகத்திலிருந்த 'ரிஷ்லியூ' என்ற பிரஞ்சுக் கப்பல் விமான 'டார்பிடோ'க்களால் தாக்கப்பட்டு, அதிகமாக பழுதாக்கப்பட்டது. இதற்குப்பிறகு, ஹாலந்து கரையோரத்தின் அருகில் இருந்த மூன்று ஜெர்மன் கப்பல்கள் இதேமாதிரியாக தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டன.

பிறகு, டராண்டோ யுத்தம் வந்தது. ஒரு நாள் இராத்திரி, நல்ல நிலா வெளிச்சத்தில், எட்டு யுத்தக் கப்பல்கள் 'டார்பிடோ'க்களால் தாக்கப்பட்டு நாசமாக்கப்பட்டன. இத்தாலிய கப்பற்படைக்கு அதிக நஷ்டம் உண்டாக்கப்பட்டது. மத்தியதரைக் கடலில், இரண்டு இத்தாலிய யுத்தக்கப்பல்கள் நாசமாக்கப்பட்டன. ஆனால் மடாபன் முனைச் சண்டையில்தான் 'டார்பிடோ பாம்பரின்' உபயோகம் நன்றாகக் காட்டப்பட்டது.

பிரிட்டிஷ் கப்பல்களைவிட இத்தாலியக் கப்பல்கள் அதிக வேகமாகச் செல்லக்கூடியவை. இருட்டுக் காலத்தில் தங்களுடைய வேகத்தினால் பிரிட்டிஷ் கப்பல்களிடமிருந்து தப்பித்துக்கொண்டு ஓடும் சமயத்தில் இத்தாலியக் கப்பல்கள் 'டார்பிடோ'க்களால் தாக்கப்பட்டு பழுதாக்கப்பட்டன. வெடிகுண்டுகளிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக, இத்தாலியக் கப்பல்கள் நேராக ஓடாமல் வளைந்துவளைந்து செல்வது வழக்கம்; அப்படிச் சென்றாலும், பிரிட்டிஷ் வெடி குண்டுகளிலிருந்து அவைகளால் தப்பமுடியவில்லை.

### 'பிஸ்மார்க்கை'த் தாக்குதல்.

"பிஸ்மார்க்" என்ற பெரிய ஜெர்மன் கப்பலை பிரிட்டிஷ் விமானங்கள் துரத்திக்கொண்டுபோயின. மிகக் கடுமையான மழையும், காற்றும், அடித்துக் கொண்டிருந்தபோதிலும் "சோர்ட்பிஷ்" "அல்பாகோரெஸ்" என்ற பெயருடைய 'டார்பிடோ' விமானங்கள் எதிரியினுடைய யுத்தக் கப்பலின்மேல்

'டார்பிடோ' க்களைப் போட்டு அதைப் பழுதாக்கி விட்டன.

இரண்டு முக்கியமான விஷயங்கள் இந்தச் சண்டைகளிலிருந்து விளக்கமாகத் தெரியவருகின்றன :—

(1) எப்படிப்பட்ட கப்பலாயிருந்தாலும் அதை ஆகாய விமானங்கள் 'டார்பிடோ' வெடி குண்டுகளினல் நாசமாக்கிவிடலாம். சாதாரண வெடி குண்டுகளைப் போடுவதைவிட இது சௌகரியமானது. ஏனென்றல் சாதாரண வெடிகுண்டுகளைப் போடுவதற்காக ஆகாய விமானங்கள், கப்பலுக்கு அருகில் போகவேண்டியிருக்கிறது. அப்படிப்போனல் கப்பலில் இருக்கும் விமான எதிர்ப்பு பீரங்கிகள் அவைகளைச் சுடும். 'டார்பிடோ' வைப் போடுவதற்கு ஆகாய விமானங்கள் கப்பலின் அருகில் போகவேண்டியதில்லை. வெகு தூரத்தில் இருந்தே கப்பல் இருக்கும் திக்கை நோக்கிப் போட்டால் போதும். 'டார்பிடோ' வெடி குண்டு கடலில் விழுந்ததும், தண்ணீருக்குள்ளேயே சென்று கப்பலைத் தாக்கும். இந்த வெடிகுண்டிலிருந்து எந்தக் கப்பலும் தப்பித்துக்கொள்ள முடியாது.

(2) 'டார்பிடோ பாம்பரை', கடல் யுத்தத்தில் யார் அதிகமாக உபயோகப்படுத்துகிருர்களோ, அவர்கள் வெற்றி பெறுவது நிச்சயம்.

'டார்பிடோ பாம்பர்' விமானங்கள் 'கேரியர்' என்ற பெரிய கப்பல்களில் கொண்டுபோகப்படுகின்றன. மழையும், காற்றுமாயிருந்தாலுங்கூட, இந்தக்கப்பல்களிலிருந்து 'டார்பிடோ பாம்பர்'கள், கிளம்பிப் பறந்து, எதிரிக்கப்பல்களை நாசம் செய்துவிட்டு, திரும்பிவந்து சேரும். 'டார்பிடோ பாம்பர்' விமானங்களின் சாமர்த்தியமானவேலை 'கேரியர்' கப்பல்களின் அவசியத்தைக் காட்டியிருக்கிறது.

### பிரிட்டனின் சிறப்பு

இதுவரைக்கும் "டார்பிடோ பாம்பர்" என்ற கடல் விமானங்களைப்பற்றிக் கூறினேம். இதைப்போலவே 'டார்பிடோ பாம்பர்' என்ற தரை விமானங்கள் இருக்கின்றன. இவைகள் அளவில் மிகப் பெரியதாயும், வெகுதூரம் பறந்துசெல்லக்கூடியவையாயும், அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஜெர்மானியர்களும் 'டார்பிடோ பாம்பர்' விமானங்களின் உபயோகத்தை அறிந்திருக்கிருர்கள். சென்ற யுத்தத்தில், 1917-ம் வருஷத்தில், இந்த விமானங்களை அவர்கள் உபயோகித்தார்கள். இப்போதும் பல கடல் விமானங்களையும், தரைவிமானங்களையும் அவர்கள் வைத்திருக்கிருர்கள். இனிமேலும், அவர்கள் இவைகளை அதிகமாக உபயோகிக்கலாம். ஆனல், பிரிட்டன்தான் இந்தமாதிரியான விமானங்கள் வைத்திருப்பதில் தலைமைஸ்தானம் பெற்றிருக்கிறது. இந்தக் காரணத்தினல், அநேக ஜெர்மன் கப்பல்களும், இத்தாலியக் கப்பல்களும், பிரிட்டிஷ் 'டார்பிடோ பாம்பர்' களால் தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டிருக்கின்றன.

# இந்தியத் துருப்புகளின் வெற்றிகள்

## இந்தியா மந்திரி மிஸ்டர் அமெரியின் புகழ்ச்சி

### புதிய ஆயுதங்களும், சிப்பாய்களின் சாமர்த்தியமும்

### பாதுகாப்புக் காரியதரிசி மிஸ்டர் ஆகில்வியின் பாராட்டு

நமது நாட்டு இந்திய மன்னர்களில் ஒருவரான மாட்சிமைதங்கிய ஹைதராபாத் நிஜாம் அவர்கள், பிரிட்டிஷ் கப்பற்படைக்கு ஒரு பெரிய கப்பலைப் பரிசாகக் கொடுத்தார். அந்தக் கப்பலுக்கு "ஹைதராபாத்" என்று பெயரிடப்பட்டது. முதல் முதலில் இந்தக் கப்பல் இந்தியா மந்திரி, மிஸ்டர் எல். எஸ், அமெரியால் கடலில் மிதக்கவிடப்பட்டது. அப்போது மிஸ்டர் அமெரி இந்தியத் துருப்புகளின் 'அழியாத புகழைப்' பற்றிக் குறிப்பிட்டார். இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்பு இலாகாவின் காரியதரிசியான மிஸ்டர் சி. எம். ஜி. ஆகள்வியும் இந்தியத் துருப்புகளின் பெருமையைப்பற்றி பாராட்டிக் கூறினர். மிஸ்டர் ஆகில்வி இந்தியாவிலிருந்து சென்று மத்திய கிழக்குப் பிரதேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு, தான் கண்ட விஷயங்களைப்பற்றி விவரமாகச் சொல்லியிருக்கிருர்.

முதலில் மிஸ்டர் அமெரியின் பிரசங்கத்தைப்பற்றி கவனிப்போம். வடக்கு ஆப்பிரிக்காவில், இந்தியாவின் ராணுவப் பெருமையைப் பாதுகாத்து, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குக் கௌரவம் கொண்டுவந்த இந்தியத் துருப்புகள் இப்போது எகிப்துக்கும் சூடானுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்த துருப்புகளின் பெருமையைப்பற்றி, இந்தியா மந்திரி கூறியதன் சாராம்சம் கீழே தரப்படுகிறது:—

இந்தியத் துருப்புகள் வடக்கு அபிசீனியாவை ஜெயித்து விட்டன; இத்தாலியின் முக்கியமான படைகளைக் கைதிகளாகப் பிடித்துக்கொண்டன. சிரியாவில் இந்தியத் துருப்புகள் வெற்றி பெறுவதற்கு அதிக உதவி செய்தன. இதைவிட முக்கியமான வெற்றியை இராக்கில் இந்தியத் துருப்புகள் அடைந்தன. அப்போது இராக்கில் நெருக்கடியான சமயம். அக்கிரமமாக அரசாங்கத்தைக் கைப்பற்றிக்கொண்ட ரஷித் அலி என்ற இராக்கின் முதல் மந்திரி, ஒரு பெரிய சூழ்ச்சி செய்து கொண்டிருந்தார். ஜெர்மனிக்கு உள் உளவாய் இருந்து, ஜெர்மானியர்களை இராக்கில் பிரவேசிக்கும்படி விட்டுக்கொண்டிருந்தார். இன்னும் ஏராளமான ஜெர்மானியர்களை வரவேற்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தார். அந்த சமயத்தில், யாதொரு காலதாமதமும் இல்லாமல், திடீரென்று ஒரு இந்தியப்பட்டாளம் இராக்குக்கு அனுப்பப்பட்டது. ரஷீத் அலிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இந்திய துருப்புகள் இராக்கில் இறங்குவதற்கு இடம் கொடுக்கலாமா, அல்லது இடம் கொடுக்க முடியாது என்று கூறிவிடலாமா என்று ரஷீத் அலி யோசனை செய்வதற்குள் இந்தியத் துருப்புகள் கப்பல்களிலிருந்து இறங்கி, தங்களுடைய வேலையைக் கவனிக்க ஆரம்பித்தன.

### இராக், சிரியா, இரான்

இதைக்கண்டு, ரஷீத் அலி, துருப்புகள் இறங்கியதை முதலில் ஒப்புக்கொண்டார்; ஆனல் இரண்டு நாட்கள் கழித்து, அதை ஆட்சேபித்தார். இதற்குள் ஆகாய விமானங்கள் மூலமாகவும், கப்பல்கள் மூலமாகவும் அநேக துருப்புகள் இராக்குக்கு வந்து சேர்ந்தன. இவைகளின் உதவியைக்கொண்டு, ஹாபனியாவிலுள்ள ஆகாய விமானச்சாலை பாதுகாக்கப்பட்டது. கிரீட்டில் நாசமாக்கப்பட்ட ஜெர்மன் விமானங்கள் சமாளித்துக்கொண்டு இராக்குக்கு வருவதற்குள், இராக்கிலுள்ள கஷ்டங்கள் இந்திய துருப்புகளின் உதவியால் நீக்கப்பட்டன. இராக்கில் வேலை முடிந்ததும், சிரியாவில் நேசதேசத்தார்களுடைய நிலைமை பலப்படுத்துவதற்கு இந்தியத் துருப்புகள் உதவிசெய்தன. அதன்பிறகு, நம்முடைய நேசநாடாகிய ரஷ்யாவுக்கு இரான் மூலமாக யுத்த சாமான் சப்ளை செல்வதற்கு வழி ஏற்படுத்துவதற்கு இந்தியத் துருப்புகள் செய்த உதவியும் மெச்சத்தகுந்தது.

ரஷ்யாவுக்கு யுத்த சாமான்கள் அனுப்புவதில் இந்தியாவும் தன் கடமையைச் செய்து கொண்டு வருகிறது. இந்தியா முக்கியமாக ஒரு விவசாய நாடாயிருந்தாலும், சென்ற சில வருஷங்களாக தொழிற்சாலை முன்னேற்றத்தில் விருத்தியடைந்திருக்கிறது. தெற்குக் கடலில் உள்ள எல்லா தேசங்களையும்விட தொழில் அபிவிருத்தியில் இந்தியாதான் முதன்மையாயிருக்கிறது. யுத்த சாமான்கள் தயார் செய்வதிலும் இந்தியா சிறப்பான வேலை செய்து வருகிறது.

சமாதான காலத்தில் இந்தியாவில் $1\frac{1}{2}$ லட்சம் சிப்பாய்கள் இருந்தார்கள். இப்போது இந்தியப் பட்டாளம் சுமார் 10 லட்சம் சிப்பாய்கள் உடையதாயிருக்கிறது. இந்தியக் கப்பல் படை முன்னிருந்ததைவிட எட்டு பங்கு அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. மத்திய கிழக்கு அரங்கத்தில் இந்திய கப்பல் படையைச் சேர்ந்த கப்பல்கள் திறமையாக வேலை செய்திருக்கின்றன. சில மாதங்களாக அட்லாண்டிக் கடல் மகாயுத்தத்திலும் இந்திய கப்பற் படையின் கப்பல்

கள் போர் புரிகின்றன. இந்தக் கப்பல்களுக்கு ஆபீசர்கள் அல்லது தலைவர்கள் இந்தியர்கள் தான். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இந்திய ஆகாய விமானப் படையும் அபிவிருத்தியடைந்து கொண்டுவருகிறது.

### சென்ற இடமெல்லாம் புகழ்ச்சி.

மேலே குறிப்பிட்ட விஷயங்கள், மிஸ்டர் அமெரி தன்னுடைய பிரசங்கத்தில் கூறியவை. இந்திய சிப்பாய்களுடைய திறமையை மெச்சி அவர் கூறியிருப்பதுபோலவே, இந்திய பாதுகாப்பு இலாகா காரியதரிசி, மிஸ்டர் ஆகிள்வியும் கூறியிருக்கிறார். இவர் கூறியதன் விவரத்தை இப்போது குறிப்பிடலாம் :—

மத்திய கிழக்கு அரங்கத்தில் உள்ள இந்தியத் துருப்புகள் நல்ல நிலைமையில் இருக்கின்றன. இந்திய சிப்பாய்கள் சென்ற இடமெல்லாம் அவர்களைப்பற்றி எல்லோரும் புகழ்ச்சியாகக் கூறுகிறார்கள். புதிய ஆயுதங்களைக் கண்டால், அவர்கள் மகிழ்ச்சியுடன் எடுத்து, அவைகளின் நுட்பங்களை எல்லாம் சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளுகிறார்கள். பகலிலெல்லாம் புதிய ஆயுதங்களின் உபயோகங்களை அறிந்து கொள்ளுவதில் அதிக கவனமாய் இருக்கிறார்கள் ; இரவில் கனவிலும் அவைகளைப்பற்றியே நினைக்கிறார்களென்றும் சொல்லலாம். புதிய ஆயுதங்களை எந்தெந்த விதமாக உபயோகிப்பது என்பதை விரைவில் தெரிந்துகொண்டு, அவைகளைச் சாமர்த்தியமாகக் கையாளுகிறார்கள். புதிய ஆயுதங்களெல்லாம் இந்திய சிப்பாய்களுக்கு ஏராளமாகக் கொடுக்கப்படுகின்றன. கைத்துப்பாக்கிகள், டாங்கி எதிர்ப்பு பீரங்கிகள், 'மார்டா' என்ற பெரிய பீரங்கிகள், இந்தியப் பட்டாளத்துக்கு 'சப்ளை' செய்யப்பட்டு வருகிறது. தோப்ரூக்கில் சண்டைசெய்து வெற்றிபெற உதவிசெய்த சில சிப்பாய்களைச் சந்தித்தேன். அவர்கள் ஆஸ்திரேலியர்களுடைய பக்கத்தில் நின்று போர்புரிந்தார்கள். அவர்களுடைய பாஷை இவர்களுக்குப் புரியாமலிருந்தாலும், இரண்டு நாடுகளின் சிப்பாய்களும் நல்ல சிநேகிதர்களாய் விட்டார்கள். இந்திய சிப்பாய்கள் சிறந்த போர்வீரர்கள் என்பதை ஆஸ்திரேலிய சிப்பாய்கள் தெரிந்துகொண்டார்கள். தோப்ரூக்கில் இருந்து சண்டையில் கலந்து கொண்டதைப்பற்றி எல்லோரும் பெருமை கொள்ளுகிறார்கள். இந்திய தொழிலாளர் படையும் சிறந்த வேலைசெய்து வருகிறது. சாமான்களை இறக்குதல், பள்ளம் தோண்டுதல் முதலிய பல வேலைகளை இப்படையினர் செய்கிறார்கள். எகிப்து தேசம் இந்தியர்களுக்குப் பிடித்துப் போய்விட்டது. இந்தியர்கள் எகிப்தியர்களிடம் தாராளமாகப் பழகுகிறார்கள்.

# பிரான்சில் ஜெர்மன் கொடுங்கோலாட்சி

## மார்ஷல் பீத்தானின் வேண்டுகோள்

### பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டின் எச்சரிக்கை

பிரான்சு தேசத்தில் ஜெர்மனியின் கொடுங்கோலாட்சி தாண்டவமாடுகின்றது. இதைத் தாங்க முடியாமல் பிரெஞ்சு மக்கள் ஜெர்மானியர்களைக் கண்ட இடத்தில் கொன்று போடுகிறார்கள். கொலைகள் அதிகரித்து வருவதைக் கண்டு ஜெர்மானியர்களுடைய கொரூ புத்தியும் அதிகரித்திருக்கிறது. ஒரு ஜெர்மானியர் கொல்லப்பட்டால், அதற்காக 50 பிரெஞ்சுக்காரர்களை அவர்கள் கொன்றுவிடுகிறார்கள். சில நாள்களுக்கு முன் இரண்டு ஜெர்மானியர்கள் கொல்லப்பட்டார்கள். இதற்காக நாண்டிஸ், போர்தோ என்ற இடங்களில் பிணையாகப் பிடிக்கப்பட்ட நூறு பிரெஞ்சுக்காரர்களைக் கொல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கொடுமையைக் கேட்டதும், நாகரீக உலகம் திடுக்கிட்டு, தன்னுடைய வெறுப்பை வெளிப்படையாகக் காட்டிற்று. ஜெர்மனிக்கு அடிமையாயிருக்கும் விஷி அரசாங்கம் கூட தன்னுடைய அதிருப்தியைக் காட்டி, 100 பிரெஞ்சு மக்களைக் கொலை செய்வதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டது.

ஜெர்மன் பட்டாள தளகர்த்தர் அப்படியே செய்வதாக ஒத்துக்கொண்டார். ஆனால் அவர் ஒரு நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறார். இரண்டு ஜெர்மன் ஆபீசர்களைக் கொன்றவர்கள் யார் என்பதை அந்தப் பிரதேசத்திலுள்ள பிரெஞ்சு மக்கள், கண்டுபிடித்து தனக்குத் தெரிவிக்கவேண்டும் என்பது தான் அந்த நிபந்தனை. ஆனால் இனிமேல் ஜெர்மானியர்கள் என்ன செய்வார்களென்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. அவர்களுக்கு மனித உயிர் மிகவும் அலட்சியமானது. அவர்களுடைய 'கௌரவத்'தைக் காப்பாற்றவேண்டுமென்றால், அதற்காக எவ்வளவு பேரை வேண்டுமென்றாலும் கொன்றுவிடுவார்கள். ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்த பின் ஏராளமான கொலைகள் நடந்தன. ஹிட்லருடைய சிநேகிதர்களும், குற்றம் செய்ததில் கூட்டாளிகளுமாயிருந்த அநேகர் ஈவிரக்கமில்லாமல் கொலை செய்யப்பட்டார்கள். இது உலகம் அறிந்த விஷயம். அப்படியிருந்தும் இப்போது பிரான்சில் நடக்கும் கொலைகளைக் கண்டு உலகம் திடுக்கிடுகிறது.

### அழிவு வேலை.

சென்ற வருஷ மத்தியில் ஜெர்மானியர்கள் பிரான்சைக் கைப்பற்றினார்கள். தங்களுடைய "புதிய சமுதாய திட்டத்தை" பிரெஞ்சு மக்களுக்குக் காட்டினார்கள். அதனால் நாட்டில் அமைதியின்மை, கலகம், கொலை முதலியன அதிகரித்தன. தங்களைக் கொடுமையாக நடத்தும் ஜெர்மானியர்களை, பிரெஞ்சுகாரர்கள் கொலை செய்கிறார்கள் ; ஜெர்மானியர்களுக்கு உபயோகமாகும் தொழிற்சாலைகள், யந்திரசாலைகள் முதலியவற்றை நாசமாக்கிவிடுகிறார்கள். சிலகாலமாக இந்த அழிவு வேலை அதிகமாய்விட்டது. ஜெர்மானியர்கள் கொல்லப்படுவது எங்கு பார்த்தாலும் பரவியிருக்கிறதென்றும், ஜெர்மனி ரஷ்யாவைத் தாக்கிய பிறகு இந்தக் கொலைகள் அதிகப்பட்டிருக்கின்றனவென்றும் ஒரு பிரெஞ்சுப் பத்திரிகை கூறுகிறது. இதற்கு காரணமென்ன? பிரெஞ்சு மக்கள் சுதந்தரத்தை விரும்புகிறவர்கள். எத்தனையோ பீத்தான்களும், தார்லான்களும் (ஜெர்மனியின் அடிமைகள்) இருந்தாலுங்கூட, இந்த சுதந்தர உணர்ச்சியைக் கொல்ல யாராலும் முடியாது.


பிணையாக எடுக்கப்பட்டிருக்கும் ஏராளமான பிரெஞ்சுக்காரர்களைக் கொன்றுவிட்டால், பிரான்சை பயப்படுத்திவிடலாம் ; பிரெஞ்சு மக்களின் சுதந்தர உணர்ச்சியை அழித்துவிடலாம் என்று ஜெர்மனி நினைத்திருக்கிறது. இம்மாதிரியான கொரூமான கொலைகளைக் கண்டு ஜெர்மனியின் கையாள்களான மார்ஷல் பீத்தானும், அட்மிரல் தார்லானும் கூட பொறுக்கமுடியவில்லை என்றால், நிலைமை எவ்வளவு மோசமாய் இருந்திருக்கவேண்டும் என்பது நன்றாகத் தெரிகிறது. விஷி அரசாங்கத்தில் முதல் மந்திரியாக இருக்கும் மார்ஷல் பீத்தான், பிரெஞ்சு மக்கள் கொலை செய்யப்படுவதைத் தடுப்பதற்காக, தானே பிணையாக இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். அட்மிரல் தார்லான் ஹிட்லருக்கு ரொம்பவும் வேண்டிய நண்பர். பிரெஞ்சு மக்கள் சுடப்படுவதை நிறுத்தவேண்டுமென்று அவர் ஜெர்மன் அதிகாரிகளை வேண்டிக்கொண்டிருக்கிறார். சுதந்திர பிரஞ்சுக்காரர்களின் தலைவரான ஜெனரல் டிகால், பிரஞ்சு மக்களுக்கு ரேடியோ மூலமாக ஒரு வேண்டுகோள் அனுப்பியிருக்கிறார். ஜெர்மானியர்களை இப்போது கொல்லவேண்டாம் ; அவர்களைத் தாக்குவதற்குக் காலம் சீக்கிரம் வரும் ; அது வரையில் பொறுமையுடன் இருக்கவேண்டும் என்று ஜெனரல் டிகால் தெரிவித்திருக்கிறார். இதல்லாமல், இத்தாலியில் உள்ள கத்தோலிக்க மதத்தலைவர் போப் அவர்கள் பிணையாக இருக்கும் பிரெஞ்சுக்காரர்களின் சார்பாக ஜெர்மன் அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்திருக்கிறார்.

### பழிக்குப் பழி.

எல்லாவற்றையும் விட, ஜெர்மன் செய்கைகளை அழுத்தமாகக் கண்டித்தது பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டும், மிஸ்டர் சர்ச்சிலும்தான். பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறுவதாவது :—

யாதொரு குற்றமும் செய்யாமல் பிணையாக எடுக்கப்பட்டிருக்கும் மக்களைக் கொலை செய்யும் மிருகத்தனமான உணர்ச்சியைக் கண்டு உலகம் வெறுக்கிறது. ஒருவன் செய்த கொலைக்காக மற்றொருவனைத் தண்

## பிரிட்டிஷ் ராஜ குடும்பம்.



**மாட்சிமை தங்கிய ஜார்ஜ் ராஜாவும், எலிசபெத் ராணியும், அவர்களுடைய குழந்தைகளும்—ராஜகுமாரிகள் எலிசபெத்தும், மார்கரெட்டும் தங்களுடைய நாய்களுடன் விளையாடுகிறார்கள்.**

---

டிக்கக்கூடாது என்பது நாகரீக உலகத்தின் கொள்கை. இதற்கு விரோதமாக, யாரோ ஒருவர் செய்த ஒரு கொலைக்கு, 50 அல்லது 100 பேரைக் கொலை செய்வது மிகவும் அநியாயமான காரியம். இந்த பயங்கர ஆட்சியினால் ஐரோப்பாவில் சமாதானம் ஏற்படாது. இதனால் வெறுப்பு என்ற விதைகள் விரைக்கப்படுகின்றன. ஒரு நாள் அவைகள் ஜெர்மனியிடம் பழிக்குப் பழி வாங்கும் என்பதில் சந்தேகமில்லை.

அமெரிக்கத் தலைவர், மிஸ்டர் ரூஸ்வெல்ட், கூறிய விஷயங்களை, பிரிட்டிஷ் முதல் மந்திரி; மிஸ்டர் சர்ச்சில், ஆமோதித்துப் பேசியிருக்கிறார். கசாப்புக் கடைக்காரன் ஆடுகளை வெட்டுவதுபோல, பிரெஞ்சு மக்கள் கொல்லப்படுகிறார்கள் என்று மிஸ்டர் சர்ச்சில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது :—

போலந்து, யூகோஸ்லாவியா, நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், எல்லாவற்றையும்விட ஜெர்மனியால் கைப்பற்றப்பட்ட ரஷ்யப் பிரதேசம்—இவைகளிலெல்லாம் உலக சரித்திரத்தில் இதுவரை நடக்காத கொலை பாதகங்கள் நடக்கின்றன. ஹிட்லருடைய பேராசை நிறைவேறுவதற்கு இடங்கொடுத்தால், பிரிட்டிஷ் மக்களும், அமெரிக்க மக்களும் இந்தக் கொடுங்கோலாட்சியின்கீழ்தான் அவஸ்தைப்படவேண்டிவரும். இப்போது நடக்கும் அக்கிரமங்களுக்குப் பழிக்குப்பழி வாங்கவேண்டும். இனிமேல், யுத்தத்தின் முக்கியமான லட்சியங்களுள் இதுவும் ஒன்றாயிருக்கும்.

### ஒரு எச்சரிக்கை.

மிஸ்டர் சர்ச்சில் யூகோஸ்லாவியாவைப்பற்றிக் குறிப்பிட்டார். யூகோஸ்லாவியாவில் 200 பேர், பொதுவுடைமைக்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு, ஜெர்மனியர்களால் தூக்கிலிட்டுக் கொல்லப்பட்டார்கள். அக்டோபர்மீ 18உ யாரோ சில ஜெர்மன் சிப்பாய்களைத் தாக்கினார்களாம். அதற்காக 200 பேர் பலியிடப்பட்டார்கள்.

இப்படிச் செய்து வருவதால், நாட்டுமக்களின் விரோத உணர்ச்சி அதிகப்படுகிறதே ஒழிய குறைவதில்லை என்று "மாஞ்செஸ்டர் கார்டியன்" என்ற பிரிட்டிஷ் பத்திரிகை எழுதுகிறது. சட்டத்தின் பாதுகாப்பையும், சுதந்தரத்தின் உரிமையையும் இழந்த மக்கள், பழிவாங்கும் எண்ணத்தில் இருப்பார்களென்றும், அதனால் பின்னால் ஜெர்மானியர்களுக்குப் பெருத்த அனர்த்தம் வந்துசேருமென்றும் அந்தப் பத்திரிகை எச்சரிக்கை செய்திருக்கிறது.

---

## ஜெர்மனியின் ரகசிய சூழ்ச்சிப் படம்
### பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டின் கையில் சிக்கியது
#### எல்லா மதங்களையும் ஒழிக்க ஹிட்லரின திட்டம்

சென்ற செவ்வாய்க்கிழமை, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் மறுபடியும் ஒரு பிரசங்கம் செய்திருக்கிறார். அமெரிக்காவின் தலை நகரமாகிய வாஷிங்டனில் இந்தப் பிரசங்கம் செய்யப்பட்டது. அந்த இடத்தில் அமெரிக்கக் கப்பற்படையின் நாளைக் கொண்டாடுவதற்காக ஒரு பெரிய விருந்தளிக்கப்பட்டது. விருந்துக்குப்பிறகு பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் பேசினார். ஜெர்மானியர்கள் அமெரிக்கக் கப்பல்களை அடிக்கடி தாக்குவதைப்பற்றி அவர் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது :—

சுடும் போட்டிப் பந்தயம் ஆரம்பித்திருக்கிறது. யார் முதலில் சுட்டார்கள என்பது தெரிந்துவிட்டது. அமெரிக்கக் கப்பல்களைத் தாக்குவதால், அமெரிக்க மக்களைப் பயப்படுத்திவிடலாம் என்று ஹிட்லர் நினைத்திருக்கிறது போல் தெரிகிறது. இந்த நினைப்பு வீண் நினைப்பு. முதலில் ஜெர்மனி சுட்டாலும்,

கடைசியில் யார் சுடுகிறார்கள் என்பது தான் முக்கியம். ஜெர்மனி இம்மாதிரியான சில்லரை விளையாட்டுகளை இதற்குமுன் செய்திருக்கிறது. இதற்கெல்லாம் அமெரிக்க மக்கள் கொஞ்சங்கூட பயப்படவில்லை. அமெரிக்கர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள விரும்புகிறார்கள்; தங்களுடைய சுயமரி யாதையைப் பாதுகாக்க ஆசைப்படுகிறார்கள்; தங்களுடைய உயர்ந்த கொள்கையை நிலைநிறுத்த ஆவலாயிருக்கிறார்கள். கடல் சுதந்திரம் அமெரிக்காவின் அடிப்படையான கொள்கை. இந்தக் கொள்கையை ஒழிப்பதற்கு ஜெர்மனி முயற்சிசெய்கிறது. இந்த முயற்சி கைகூடப்போவதில்லை.

பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட், தம்முடைய பிரசங்கத்தில் இரண்டு ஆச்சரியமான விஷயங்களைப்பற்றிக் கூறினார். அமெரிக்காவையும் கைப்பற்றுவதற்கு ஹிட்லர் செய்திருக்கும் தந்திரங்களைப்பற்றி அவர் குறிப்பிட்டார். ஜெர்மனியில் ஹிட்லருடைய அரசாங்கம் இது சம்பந்தமாக ஒரு ரகசிய பூகோளப்படம் தயார் செய்திருந்தது. அந்தப்படம் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டின் கையில் இப்போது சிக்கியிருக்கிறது. தென் அமெரிக்காவையும், மத்திய அமெரிக்காவின் ஒரு பாகத்தையும் கைப்பற்றுவதற்காக ஹிட்லர் செய்திருக்கும் ஏற்பாடு அதில் விளக்கமாகத் தெரிகிறது.

### ஜெர்மனியின் நோக்கம்

தென் அமெரிக்கா இப்போது 14 நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஹிட்லருடைய திட்டம் ஐந்து நாடுகளாகப் பிரித்திருக்கிறது. அதில் ஒன்று பனமா குடியரசாங்கமும், பனமா கால்வாயும். இதனால் ஜெர்மனியின் நோக்கம் தென் அமெரிக்காவைமாத்திரம் கைப்பற்றுவதல்ல; பனமா கால்வாயைக் கைப்பற்றிக்கொண்டு அதன் மூலம் ஐக்கிய நாடுகளாகிய வட அமெரிக்காவையும் கைப்பற்ற வேண்டும் என்பதுதான் என்று நன்றாகத் தெரிகிறது.

பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டிடம் ஜெர்மனியின் மற்றொரு ரகசியத்திட்ட சம்பந்தமான ஒரு முக்கியமான காகிதம் சிக்கியிருக்கிறது. அதில் ஜெர்மனி எல்லா மதங்களையும் அழிக்கப்போவதாகவும், பிராடெஸ்டண்ட், கத்தோலிக், மகம்மதிய, இந்து, புத்த, யூத மதங்களெல்லாம் அடியோடு ஒழிக்கப்படுமென்றும், திட்டம் போடப்பட்டிருக்கிறது. எல்லா மாதா கோவில்களும் ஜெர்மனியால் கைப்பற்றப்படும், சிலுவை முதலிய மதச்சின்னங்களை யாரும் உபயோகிக்கக்கூடாது. பாதிரிமார்கள் பேசாமல் இருக்க வேண்டும்; இல்லாவிட்டால் கைதிக் கொட்டடிகளில் அடைக்கப்படுவார்கள். ஏனென்றால் ஹிட்லருக்கு மேலாக அவர்கள் கடவுளைப்பற்றிப் பேசுகிறார்களாம். இப்போதிருக்கும் மாதாகோவில்களுக்குப் பதிலாக, ஒரு அகில தேசீய நாஸி மாதா கோவில் ஏற்படுத்தப்படும். கிறிஸ்தவ வேதமாகிய பைபிளுக்குப் பதிலாக ஹிட்லருடைய வாழ்க்கைச் சரித்திரமாகிய "மைன் காம்ப்" உபயோகப்படுத்தவேண்டும். கிறிஸ்துவின் சிலுவைக்குப் பதிலாக, ஜெர்மன் நாஸிகளின் சின்னங்களாகிய ஸ்வஸ்திகாவும், வாளும் உபயோகிக்கவேண்டும். அன்பும் இரக்கமும் உள்ள கடவுளுக்குப் பதிலாக, இரும்பும், ரத்தமும் உருவான கடவுள் ஏற்படுத்தப்படும்.

### ஹிட்லரிசம் ஒழிக்கப்படவேண்டும்.

பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட், மேலும் கூறியதாவது:—ஹிட்லருடைய முன்னேற்றம் தடுக்கப்படவேண்டும்; அது அமெரிக்காவால் கட்டாயம் தடுக்கப்படும். அமெரிக்கா ஹிட்லரிசத்தை ஒழிப்பதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறது. இதற்காக, ஹிட்லரிசத்தை எதிர்த்துப் போர்புரிகிறவர்களுக்கெல்லாம் அமெரிக்க யுத்த சாமான்கள் உதவி அனுப்பப்படுகிறது. இந்த சாமான்களால் அமெரிக்கத் துறைமுகங்களிலேயே இருக்கும்படி யாராலும் கட்டாயப்படுத்த முடியாது; சாமான்கள் கொண்டு போகும் கப்பல்களை முழுகடிப்பதையும் அமெரிக்கா தடுக்கும்.

1937-ம் வருஷத்தில் நிறைவேற்றப்பட்ட நடு நிலைமைச் சட்டத்தைக் குறித்து, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் சில வார்த்தைகள் சொன்னார். அவர் சொன்னதாவது:—நடு நிலைமைச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று அமெரிக்க சட்ட சபை 'ஓட்' செய்திருக்கிறது. அமெரிக்க மேல் சபையாகிய 'செனெட்' டின் அயல் நாட்டுக் கமிட்டி, சட்டத்தில் உள்ள சில தொந்தரவான தடைகளை நீக்கிவிடவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறது.

அமெரிக்காவில் உள்ள தொழிலாளர் தகராறுகளைப் பற்றி, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கூறியதாவது:— அமெரிக்க தொழிற்சாலைகளும், கப்பற்சாலைகளும் உற்பத்தி வேலையில் அபிவிருத்தியடைந்து வருகின்றன. இன்னும் பலமடங்கு உற்பத்தி அதிகப்படும்படியான சௌகரியங்கள் இருக்கின்றன. ஆனால் இதைத் தடுப்பதற்கு ஒரு சிறுபான்மைக் கூட்டமாகிய தொழிற்சாலை மானேஜர்கள் முயற்சிசெய்கிறார்கள். அவர்கள் சுய நலத்துக்காக முட்டுக்கட்டை போட்டுக்கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய முயற்சி கைகூடப்போவதில்லை. அமெரிக்காவின் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பற்றி அரசாங்கம் சதாகாலமும் கவனித்துக்கொண்டு வருகிறது. அமெரிக்கக் கப்பற்படை இப்போது மிகப் பெரிதாய்விட்டது. யுத்தத்திற்குத் தயாராய் இருக்கிறது. தேச முழுவதும் பாதுகாப்புக்கு வேண்டிய முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தப் பாதுகாப்பின் முதல் நோக்கம் ஹிட்லரைத் தடுப்பதுதான்.

### அமெரிக்காவின் பொறுப்பு.

ரஷ்யாவுக்கு அனுப்பவேண்டிய உதவியைப்பற்றி பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் முக்கியமாகக் குறிப்பிட்டார். அவர் சொன்னதாவது:—

ரஷ்யாவுக்குச் சகலவித உதவியும் தேவையாயிருக்கிறது. ஆகாய விமானங்கள், டாங்கிகள், பீரங்கிகள், வைத்திய சிகிச்சை மருந்துகள் முதலியவை வேண்டியிருக்கின்றன. அமெரிக்காவும், பிரிட்டனும், இவைகளை ஏராளமாக அனுப்பிக்கொண்டே இருக்கின்றன. அமெரிக்காவுக்கு ஒரு பிரம்மாண்டமான பொறுப்பு இருக்கிறது. தன்னுடைய துருப்புகளுக்கு வேண்டிய யுத்த சாமான்களை 'சப்ளை' செய்ய வேண்டியிருக்கிறது. இதல்லாமல், பிரிட்டன், ரஷ்யா, சீனா ஆகிய மூன்று நாடுகளுக்கும் வேண்டிய சாமான்களையும் தயார்செய்து 'சப்ளை' செய்ய வேண்டியிருக்கிறது. இந்த கடமையை அமெரிக்கா சரிவரச் செய்யும்.

---

## வாரச் செய்திக் குறிப்புகள்

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் விமானப் போர்

ஜெர்மனியிடைய ராணுவ பலத்தைக் குறைக்க வேண்டுமென்றால் அதனுடைய உற்பத்தி பலத்தை குறைக்கவேண்டும். ஜெர்மனியின் யுத்த ஆயுத சாமான்கள் செய்யும் சாலைகள், விமானச்சாலைகள், கப்பல் கட்டும் சாலைகள் இவைகளை எல்லாம் அழிக்க வேண்டும். இந்த வேலையை பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை தொடர்ச்சியாக செய்துகொண்டு வருகிறது. அடிக்கடி ஜெர்மனியின் முக்கியமான தொழிற்சாலைப் பட்டணங்களின்மேல் பறந்து வெடி குண்டுகளைப் போட்டுக்கொண்டு வருகிறது.

சென்ற வாரம்கூட பிரிட்டிஷ் விமானங்கள் இந்த முக்கியமான வேலையைச் செய்திருக்கின்றன. வட மேற்கு ஜெர்மனியின்மேல் பறந்து ஹாம்பர்க், கீல், முதலிய பட்டணங்களை வெடி குண்டுகளினால் பலமாகத் தாக்கின. பிறகு தெற்கு ஜெர்மனியிலும், தென் மேற்கு ஜெர்மனியிலும் வெடி குண்டுகளை மழைபோலப் பொழிந்தன. சேர்பர்க் என்ற இடத்திலுள்ள எதிரிகளின் கப்பல் சாலைகள் வெடி குண்டுகளால் தகர்க்கப்பட்டன.

ஜெர்மன் விமானங்கள் சென்ற வாரம் பிரிட்டனின்மேல் பறந்து சில இடங்களில் வெடி குண்டுகளைப் போட்டன. இங்கிலாந்தின் கிழக்குக் கரையோரத்தின்மேல் பறந்துகொண்டிருந்த இரண்டு ஜெர்மன் விமானங்கள் பிரிட்டிஷ் விமானங்களால் சுட்டு கடலில் வீழ்த்தப்பட்டன. தென் மேற்கு இங்கிலாந்தில் ஜெர்மன் விமானங்கள் சில வெடி குண்டுகளைப் போட்டன. அதிக சேதம் ஒன்றும் உண்டாக்கப்படவில்லை.

## 2. இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல்.

இத்தாலியில் உள்ள முக்கியமான கடற்கரைப் பட்டணமாகிய நேபில்ஸ், பிரிட்டிஷ் ஆகாய விமானப் படையால் சென்றவாரம் தாக்கப்பட்டது. இரண்டு டன் எடையுள்ள வெடிகுண்டுகள் நேபில்ஸ் மேல் போடப்பட்டன. ரயில்வே சாலைகளிலும், ரயில்வே ஸ்டேஷன் கட்டடங்களிலும் வெடிகுண்டுகள் விழுந்து சேதத்தை உண்டாக்கின.

வட ஆப்ரிக்காவில், தோப்ரூக் திறமையாகப் பாது காக்கப்பட்டுவருகிறது. தோப்ரூக்கிலுள்ள துருப்புகள் முன்னேறிச்சென்று எதிரிகளின் ஸ்தானங்கள் சிலவற்றைக் கைப்பற்றிக்கொண்டார்கள். முக்கியமாக, கோண்டார் பிரதேசத்தில் பிரிட்டிஷ் துருப்புகள் எதிரித் துருப்புகளைத் தாக்கின. திரிபோலி, பென்காசி என்ற துறைமுகங்களின்மேல் பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன.

மத்திய தரைக்கடலில் சில எதிரிக் கப்பல்கள் பிரிட்டிஷ் 'சப்மரீன்' களால் (நீர் முழுகிக் கப்பல்கள்) தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டன.

## 3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் சென்றவாரம் ஒரு முக்கியமான பிரசங்கம் செய்தார். அமெரிக்க கடற்படை நாள் கொண்டாட்ட விருந்தில் அவர் பேசினார். ஹிட்லர் அமெரிக்காவின் சுதந்தரத்தை அழிக்க விரும்புவதைத் தடுக்கவேண்டுமென்றும், அமெரிக்கர்கள் யுத்தத்துக்கு ஆயத்தமாக தக்க இடங்களில் வேண்டிய முஸ்தீப்புடன் அமர்ந்திருக்கிறார்களென்றும், தென் அமெரிக்காவையும் பனாமா கால்வாயையும் கைப்பற்ற ஹிட்லரால் திட்டம் போடப்பட்டிருக்கிறதென்றும், ஹிட்லரிசத்தை அடியோடு ஒழித்து விடுவதற்கு அமெரிக்கா கங்கணங்கட்டிக்கொண்டிருக்கிறதென்றும் கூறினார்.

அட்லாண்டிக் கடலில் நடந்த சம்பவங்களைப்பற்றியும் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது: அட்லாண்டிக் கடலில் உள்ள அமெரிக்க கப்பல்கள் அமெரிக்க கரையோரத்தில் ஜெர்மன் 'சப்மரீன்'களால் தாக்கப்படுகின்றன. மத்திய அட்லாண்டிக் கடலில் அநேக அமெரிக்க வர்த்தகக் கப்பல்கள் ஜெர்மனியால் முழுகடிக்கப்பட்டன. செப்டெம்பர்மீ 4வ ஒரு அமெரிக்க நாசகாரி கப்பல் தாக்கப்பட்டது. அக்டோபர்மீ 17வ மற்றொரு நாசகாரி கப்பல் தாக்கப்பட்டது. அமெரிக்க கப்பற்படையைச் சேர்ந்த 11 வீரர்கள் ஜெர்மானியர்களால் கொல்லப்பட்டார்கள். அமெரிக்கா ஜெர்மனியால் தாக்கப்பட்டிருக்கிறது. அமொக்க கப்பல் "சீர்கேயை"த் தாக்கியது, எல்லா அமெரிக்கர்களையும் தாக்கியதுபோலாகும்.

பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் பிரசங்கத்தின் மற்ற விவரங்கள் இந்த இதழில் வேறொரு இடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

## 4. ரஷ்யாவும், பின்லாந்தும்.

ரஷ்யாவில் பிரம்மாண்டமான யுத்தம் நடந்து வருகிறது. மத்திய பகுதியில், மாஸ்கோ பிரதேசத்தில், ரஷ்யர்கள் ஜெர்மானியர்களை எதிர்த்து தாக்கிக் கொண்டிருக்கிறார்கள். மாஸ்கோவின்மேல் ஜெர்மன் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன. தெற்குப் பகுதியில் கிரைமியாவுக்கு செல்லும் வழியில் கடுமையான யுத்தம் நடந்தது. 35,000 ஜெர்மன் சிப்பாய்கள் இந்த சண்டையில் உயிரிழந்தார்கள். 10 நாள் நடந்த சண்டைக்குப் பிறகு, கிரைமியாவுக்குள் ஜெர்மன் துருப்புகள் பிரவேசித்ததாக ஜெர்மனி கூறுகிறது. தெற்குப் பகுதியில் யூக்ரேயினின் முக்கிய பட்டணமாகிய கார்கோப்பை விட்டு ரஷ்யர்கள் வெளியேறி விட்டார்கள்.

ரஷ்யாவில் கடுமையான யுத்தம் நடந்துகொண்டிருந்தாலும் மக்களின் வாழ்க்கை வழக்கம்போல நடந்துகொண்டிருக்கிறது. இதைப்பற்றி மிஸ்டர் வர்னன் பார்ட் லெட் என்ற பிரபல பத்திரிகை நிருபர் சில விவரங்களைக் கூறியிருக்கிறார். அவை பின்வருமாறு :—

வாரக்கடைசியில் நடனக் கொட்டகைகள் எல்லாம் திறந்துதானிருக்கின்றன. ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை நேரத்தில் லெனின்கிராட்டில் பேர் பெற்ற நடிகைகள் நடனம் செய்கிறார்கள். திரளான ஜனங்கள் கூடி இதைக் கண்டு சந்தோஷப்படுகிறார்கள். அதிக உற்சாகத்தோடு இதைப்பற்றிப் பேசிக்கொண்டு போகிறார்கள். மாஸ்கோ மக்களைப்போல் தங்கள் நடனக் கச்சேரிகளைப்பற்றிப் பெருமை கொள்பவர்கள் வேறுயாருமே இல்லை. ஹிட்லரின் பட்டாளங்கள் தங்கள் நகரத்தை நெருங்கியபோதிலும் அவர்கள் தங்கள் நடனக்கச்சேரிகளைக் கைவிடவில்லை.

சினிமாக் கொட்டகைகளில் "பிரிட்டனால் சமாளிக்க முடியும்" என்ற படம் காட்டப்படுகிறது. அதனோடு மாஸ்கோவைப்பற்றிய அதே மாதிரியான படமொன்றும் காட்டப்படுகிறது. ஆனால் இந்தப் படம் அவ்வளவு மனதை உருக்குவதில்லை. ஏனென்றால் ரஷ்யாவின் தலை நகரத்தில் மிகச் சொற்பமான ஜெர்மன் விமானங்களே வந்து தாக்குகின்றன.

ஹிட்லரின் பிரசார மந்திரி, டாக்டர் கோப்பல்ஸ் மாஸ்கோவைப்பற்றிப் பொய் சொல்லியதைப்போல் அவ்வளவு பச்சையாக வேறு எந்த ஊரையும் பற்றிச் சொல்லவில்லை. இத்தனை வருஷமாக இருந்து வந்தது போலத்தான் இப்போதும் ரஷ்ய மக்கள் ரொட்டி, பால், பத்திரிகை ஆகியவற்றிற்கும் வேறு பலப்பல பொருள்களுக்கும் வரிசையாய் நின்றுகொண்டிருக்கிறார்கள். இதை ஜெர்மானியர்கள் மாற்றிக்கூறி, உணவுப்பொருள்களுக்காக ரஷ்யர்கள் சண்டை போடுகிறார்கள் என்று கூறுகிறார்கள். தங்கள் நாட்டில்மீது படையெடுப்பு நடக்குமென்று ரஷ்யர்கள் எதிர் பார்த்திருந்தார்கள். தங்கள் ராணுவ பலத்தைப் பெருக்குவதற்காக அவர்கள் தங்கள் சுக போகங்களையும், அவசியமான பொருள்களையும் தியாகஞ் செய்திருக்கிறார்கள். இந்த யுத்தத்தில் அவர்களுக்கு நல்ல ஆயுத முஸ்தீப்பு இருக்கிறது.

## 5. பால்கன்ஸ், துருக்கி, சிரியா முதலியன

துருக்கி குடியரசின் 18-வது வருஷக் கொண்டாட்டத்தின்போது, பிரிட்டிஷ் அரசர் ஜார்ஜ் அவர்கள் குடியரசுத் தலைவர் மிஸ்டர் இனோனுவுக்கு ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறார். அதில் பிரிட்டிஷ் அரசர் கூறுவதாவது :—

நேச நாடான துருக்கி ஒரு மிக நெருக்கடியான சமயத்தில் தன்னுடைய சுதந்தரத்தைக் காப்பாற்றிக்கொண்டுவருகிறது. இதை பிரிட்டிஷ் மக்கள் மிகவும் பாராட்டுகிறார்கள். துருக்கி, பிரிட்டனுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களைப் பின்பற்றி உண்மையுடனும், கௌரவத்துடனும் நடந்து வந்திருக்கிறது.

இந்தியாவையும், ரஷ்யாவையும் ஒன்று சேர்ப்பதற்காக இரானில் ஒரு ரோட்டு போடப்படுகிறது. கிழக்கு இரானை இந்தியாவுடன் சேர்த்துவிட்டால் இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் ரயில்வே தொடர்ச்சி ஏற்படும். இதன் வழியாக ரஷ்யாவுக்கு யுத்த சாமான்கள் அனுப்பலாம்.

சிரியாவில் குடியாட்சி ஏற்படுத்தப்பட்டது. இதை பிரிட்டிஷ் அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறது. சிரியாவில் ஒழுங்கான அரசாங்கம் ஏற்படுத்த பிரிட்டன் மிகவும் உதவி செய்தது. சிரியா ஒரு முக்கியமான நாடு. அதன் முக்கியத்தைப்பற்றிய சில விவரங்கள் கீழே தரப்படுகின்றன.

மத்திய கீழ்த் திசையில் ஜெர்மானியர் எங்குப் பாய்வதாயிருந்தாலும், அவர்களுடைய நேர் பாதையில் சிரியா இருக்கிறது. ஆகையால் அது முக்கியமானதொரு போர்க்களம். மத்திய கீழ்த்திசையில் தளகர்த்தராயுள்ள ஜெனரல் ஆக்கின்லெக் சமீபத்தில் சிரியாவுக்கு விஜயஞ்செய்து சுதந்தரப் பிரெஞ்சுத் தலைவரான ஜெனரல் காட்ரோவோடு கலந்தாலோசித்தார். சிரியாவில் பிரிட்டிஷ் சிப்பாய்களும், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சிப்பாய்களும் இருக்கிறார்கள். இதல்லாமல், அனுபவமும் பயிற்சியும் பெற்ற சுதந்தரப் பிரெஞ்சுத் துருப்புகளும் இருந்து வருகின்றன. ஜெர்மன் துருப்புகள் டாரஸ் மலைகளைத் தாண்டித் துருக்கிக்குள் பிரவேசித்தால் அவை

களை எதிர்க்க இந்த துருப்புகள் தயாராயிருக்கின்றன. இந்த மலைப் பிரதேசந்தான் சிரியாவுக்கு மிகவும் பலமான பாதுகாப்புக் கோட்டை என்று சொல்லலாம்.

## 6. கப்பல் நிலைமை

சென்ற இரண்டு மாதங்களாக அதாவது ஆகஸ்ட்டு, செப்டெம்பர் மாதங்களில் ஒரு நாளைக்கு ஒரு கப்பல் விகிதமாக எதிரிக் கப்பல்கள் முழுகடிக்கப்பட்டிருக்கின்றன என்று சென்ற வாரம் விபரம் வெளியிடப்பட்டது. மத்திய தரைக் கடலில், 38 எதிரிக் கப்பல்கள் முழுகடிக்கப்பட்டன. "சிட்டாடி ஜினீவர்" என்ற இத்தாலிய வர்த்தகக் கப்பல், 5,413 டன் எடையுள்ளது. கடல் வெடி குண்டினால் தாக்கப்பட்டு அது முழுகடிக்கப்பட்டது.

பாரசீகக் குடாக்கடலில் ஏழு எதிரிக் கப்பல்கள் ஆஸ்திரேலிய யுத்தக் கப்பல்களால் கைப்பற்றப்பட்டன.

## 7. தூரக் கிழக்கு அரங்கம்

ஜப்பானுடைய தற்கால நிலைமையை சீனாவின் அயல் நாட்டு மந்திரி, விளக்கிக் கூறியிருக்கிறார். ஒரு புலியின் முதுகில் ஏறியிருக்கும் மனிதனைப் போல ஜப்பான் இருக்கிறது என்று அவர் கூறினார். மனிதன் கீழிறங்கவும் முடியாது, புலியின் முதுகின் மேலேயே இருக்கவும் முடியாது: அதைப் போல ஜப்பான் புதிய யுத்தம் ஆரம்பிப்பதைப்பற்றி தடுமாடிக்கொண்டிருக்கிறது. ஆனால் பசிபிக் கடலிலுள்ள நாடுகள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் சச்சரவு ஏற்படும் என்று சீன அயல் நாட்டு மந்திரி, மிஸ்டர் கோதெஷீ கூறினார்.

ஜப்பானியத் துருப்புகளும், ரஷ்யத் துருப்புகளும் ரஷ்ய எல்லையில் கைகலந்தன. காயம்பட்ட ஜப்பானியர்கள் எல்லையைத்தாண்டி ஜப்பானியர்களால் தூக்கிச் செல்லப்பட்டார்கள். இது ஒரு முக்கியமான சம்பவம் அல்ல என்று ஒரு ஜப்பானிய பத்திரிகை கூறுகிறது.

இச்சாங் பிரதேசத்தில் ஜப்பானியர்கள் விஷப் புகையை உபயோகித்தார்கள். 300 சீன சிப்பாய்கள் இறந்து போனார்கள்.

## 8. விஷி

இரண்டு ஜெர்மன் ஆபீசர்களைக் கொன்றதற்காக, 100 பிரெஞ்சுக்காரர்களுக்குக் கொலைத்தண்டனை விதிக்கப்பட்டது. இது சம்பந்தமாக மார்ஷல் பீத்தானும், அட்மிரல் தார்லானும் செய்த முயற்சிகளைப்பற்றிய விவரங்கள் இந்த இதழில் வேறொரு கட்டுரையில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

## 9. ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகள்

போலந்தில் உள்ள ஆஸ்பத்திரிகள் ஜெர்மானியர்களுக்கு உபயோகப்படுகின்றன. வார்சாவிலுள்ள ஆஸ்பத்திரியில், ரஷ்ய யுத்தத்தில் காயமடைந்த ஏராளமான ஜெர்மானியர்கள் சிகிச்சை பெற்றுவருகிறார்கள். ஒரு நாளைக்கு 11,000-த்திலிருந்து 14,000 ஜெர்மன் சிப்பாய்கள் காயமடைந்து ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு வருகிறார்கள் என்று துருக்கியிலிருந்து வந்த செய்தி கூறுகிறது. இதனால் போலந்திலுள்ள மக்கள் யாருக்கும் வைத்திய சிகிச்சை உதவி கிடைப்பதே இல்லை.

ருமேனியாவில் ஹிட்லரின் இரும்புப்படைத்தலைவர் கொல்லப்பட்டார்.

## 10. நடுநிலைமை நாடுகள்

ஸ்வீடன் இந்த யுத்தத்தில் கலக்காமல் நடுநிலைமையாய் இருக்கும் என்ற விஷயத்தை ஸ்வீடனின் அயல் நாட்டு மந்திரி வற்புறுத்திக் கூறினார். ரஷ்யா யுத்தத்தில் இறங்கியதால் சிக்கலான நிலைமை ஏற்பட்டிருக்கிறது; இருந்தபோதிலும், ஸ்வீடன் தன்னுடைய நடு நிலைமையைக் கைவிடப் போவதில்லை என்று அவர் கூறினார்.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றன்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.**

[சென்னை இன்பர்மேஷன் ஆபீஸர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.